'செய்தித் தாளாகப் பதிவு பெற்றது'

உ
சிவமயம்

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

21 SEP 1972

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத்- அச]   யாழ்ப்பாணம்:-   பரிதாபி ஞு ஆவணி மீ ௩0 உ   வெள்ளிக்கிழமை (15-9-1972)   [இல: உ௩

# சைவ சமயத்தைப் பாதிக்கும் திட்டம் ஏன்?

## பிறமத போதனைகள் சிறுவர்களுக்கு உகந்ததல்ல!

**திரு த. சோமசுந்தரம் அவர்கள்**
(தலைவர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.)

சிந்தாமணியில் 10-9-72 பிரசுரிக்கப்பட்ட சைவ சமய பாடத் திட்டத்தைப் பார்த்த சைவ மக்கள் தங்கள் சமயத்தை அத் திட்டம் அழிக்க வழி வகுக்குமோவென அஞ்சுகின்றார்கள்.

பிற மதங்களைப் பற்றிப் படிக்கக் கூடாது என்ற கொள்கை சைவமக்களுக்கு இல்லை. ஆனல் அதை படிக்கவேண்டிய மாணவர்களுடைய அறிவு, மாணவர் வளர்ச்சி முதலியவற்றைக் கவனித்துச் செய்ய வேண்டும் — பிறச் சமயக் கருத்துக்கள் சைவ சமய பாடத்தில் இடம்பெறுதல் கூடாது. சைவ சமயபாடத் திட்டம் சாதாரணமாகப் பாடசாலைகளிற் கற்கும் மாணவர்களுக்கு முழுவதும் சைவ சமய பாடமாகவே இருத்தல்வேண்டும்.

சர்வகலாசாலையிற் படிக்கும் மாணவர்களுக்கு ஒப்பு நோக்கத்திற்காக வேண்டுமானல் பிற மத நூல்களையும் பாடத்திட்டத்தில் சேர்க்கலாம். ஆனல் இளம்பிள்ளைகளுக்குச் சிறு வயதிலே பிற மதபோதனை ஆகாது. ஒவ்வொரு மதப் பிள்ளைகளும தங்கள் சமய ஒழுங்குகளையும் ஆசாரங்களையும் படித்து அவற்றின் நெறி நிற்கப் பழக வேண்டும். அதே நேரத்தில் பிற மதத்தைப்பற்றி போதிப்பதன் நோக்கம் பிழையானதாகவே தோன்றுகிறது. மனத்தில் கலக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வயதுள்ள சிறுவர்களுக்குக் கட்டாய பாடமாகப் பிறமத அறிவைப் புகுத்தல் கூடாது.

"கல்வி அமைச்சின், இந்துசமய ஆலோசனைச் சபையின் சிபாரிசுஒன்றை அடுத்தே இந்தப் புதிய திட்டத்தைக் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்த உள்ளது" என்ற சிந்தாமணிச் செய்தி கூறுகிறது.

சைவ சமயப் பாடத்திட்டம் வகுப்பதற்குச் சைவ சமயிகளே உரித்து உடையவராவர். இந்து மதம் ஒரு சமயம் அல்ல என்பதை யாவரும் அறிந்திருத்தல் வேண்டும். இந்து சமயத்தில் பல சமயங்கள் உண்டு இந்து சமய ஆலோசனைக் குழுவில் புராதன சைவசமயச் சபைகளதும் சங்கங்களதும்பிரதிநிதிகள் இடம்பெறுதல் வேண்டும். சைவ சமய சம்பந்தமான பாடத் திட்டங்களை வகுக்கவோ, புத்தகங்கள் எழுதவோ சைவ சமய நெறியில் சமய சாத்திரப் பயிற்சியுடன் ஒழுகும் சிலர்க

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

---

உ
திருச்சிற்றம்பலம்

வடிவுடை மழுவேந்தி
மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனி
புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக்
கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த
வதிசய மறியனே.

திருச்சிற்றம்பலம்
— சுந்தரமூர்த்தி நாயனூர்

---

## சங்கீத விழா

அகில இலங்கை சங்கீத வித்வச்சபை கர்நாடக சங்கீத விழா வொன்றினை 10-9-72 முதல் 21-9-72 வரை (11 நாட்களுக்கு) நல்லூர்ஞான சம்பாந்த ஆதீனத்தில் நடத்தி வருகின்றது ஈழத்தின் தலைசிறந்த கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர்.

---

நாவலர் பெருமான் கூறிய வழியில்

## சமயப் பரீட்சைகள்

— சைவப்புலவர் வ. கந்தசாமி, மிருந்தலை —

சமயக் கல்வி மனித வாழ்வின் ஆத்மீக வாழ்வுக்கு முக்கியமானது. இளம்வயது முதல் சிறுவர்களுக்குச் சமயக் கல்வி புகட்டப்படவேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் சமயக் கல்வி அறிவை வளர்ப்பதற்காகவே பல பணிகள் புரிந்துள்ளார் என்பது சைவ உலகு கண்ட உண்மையாகும். பாடசாலைகள் தோறும் சமயக் கல்வி முக்கிய இடம்பெற வேண்டும். இன்றைய சூழ் நிலையில் சைவ பரிபாலன சபையார் நாவலர் பெருமான் கூறிய வழியில் சைவசமய பாடப் பரீட்சை நடாத்த முன்வந்ததை சைவஉலகம் பாராட்ட வேண்டும். இம் முயற்சிக்குப் பல பாடசாலைகள், சைவப் பிரமுகர்கள், சைவப்புரவலர்கள் முன்னின்று ஆதரவு காட்டி உழைத்து வருகின்றார்கள். மேலும் திருமுறைகளைப் பண்ணிசையுடன் படித்துக் கொள்ள ஒரு வாய்ப்பையும் இச் சபை ஏற்படுத்தியுள்ளது. ஞாயிறு தோறும் திருமுறை வகுப்பு நடைபெறுகின்றது. சூழ்நிலைக்கும், காலத்துக்கும் ஏற்றவகையில் தேவையான அதி முக்கியமான சமயப் பணிகளைப் புரிந்து வரும் சைவபரிபாலன சபையின் பணிகளுக்கு இயலுமான உதவி புரிந்து, அச்சபை வளம்பெற்றுச் சீரோங்கி வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

---

## பாரதி விழா

சுப்பிரமணிய பாரதியார் விழா விவேகானந்த சபை மண்டபத்தில் விவேகானந்த மகாவித்தியாலய அதிபர் திரு வ. நடராசா தலைமையில் 11-9-72 திங்கட் கிழமை நிகழ்ந்தது. கருத்தரங்கு முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெற்றது.

(எமது கொழும்பு நிருபர்)

---

# இந்து சமய ஆலோசனைச் சபையில் சைவ பரிபாலன சபை அங்கத்துவம் கோருகின்றது

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 10-9-72ல் நடத்தப் பெற்ற சைவ பரிபாலன சபை நிருவாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. இந்துக் கலாசார ஆலோசனைச் சபையில் இலங்கையிலுள்ள பழமையான யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினதும் பிற முக்கியமான சைவத்தாபனங்களினதும் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுக்காததையிட்டு இச் சபை கவலையுறுகின்றது.

எதிர்காலத்தில் மேற்படி ஆலோசனைச்சபையில் யாழ்ப்பாண சைவபரிபாலனசபையினதும் பிறமுக்கியமான சைவத்தாபனங்களினதும் பிரதிநிதிகளைச் சேர்த்துக்கொள்ளும்வண்ணம் அரசாங்கத்தை கேட்க வேண்டும்.

2 சைவசமயம் சம்பந்தமான நூல்களை அச்சிடும் கடமையை யாழ்ப்பாண சைவபரிபாலன சபைக்கு இயலுமாயின் ஒப்படைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

3. எதிர்காலத்திற்கு அமைக்கப்படும் சைவசமயபாடத்திட்டத்தில் சிறுவர்களுக்கு ஊட்டப்படும் சைவசமயக் கல்வியுடன் பிறசமய நூல்களையும் கற்பித்தலை இச்சபை வன்மையாக ஆட்சேபிக்கின்றது.

4 இந்துமாமன்றத்தினது கொள்கைகளும் செயல்களும் வேத சிவாகம நெறிக்கு முரணுகவுள்ளபடியாலும் அந்நிலை வைதிக சைவநெறி வளர்ச்சிக்குப் பங்கம் விளைப்பதாக இருத்தலினாலும் சைவபரிபாலனசபை இந்துமாமன்றத்துடனுள்ள தொடர்பை நீக்கிக்கொள்ளுகின்றது.

---

# கிளிநொச்சி குருகுலத்தில் சர்வ சக்தி பீடம் வேண்டியதே

**பண்டிதமணி ஆசி**

"சர்வசக்தி வாய்ந்த குருபீடம் ஒன்று அமைவதற்கு அடிக்கல் நாட்டுதல் என்ற மங்கலகரமான விழா நல்ல வேளையில் இங்கே நடைபெற்றிருக்கின்றது. இப் பீடம் குருகுல வாசஞ் செய்பவர்களாகிய மாணவ மாணவிகளுக்கும் மற்றையோருக்கும் எல்லா வகை நன்மைகளையும பெருக்கிக் கொண்டு நிலை பெற்றிருப்பதாக" என்று திருவருளைப் பிரார்த்திப் போமாக'

கிளிநொச்சி குருகுலத்தில் அமையவிருக்கும் சர்வ சக்தி பீடம் - குரு பீடம் இவற்றுக்கான மண்டபங்களுக்களுக்குமுரிய அடிக்கல்லை நாட்டிவைத்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது ஆசியுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தவத்திரு வடிவேற் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தமது கருத்தைத் தெரிவிக்கையில் 'பொதுப் பணி மிகவும கவனத்துடன் செய்யப்பட வேண்டியது. அதற்கு நல்ல மனுஷர்கள் தேவை. திருநெல்வேலி அநாத சாலையிற படித்து ஆசிரியராகப் பணிபுரிந்து கிளிநொச்சிக் காட்டை பேரானந்தப் பூந்தோட்டம் என்று அதிசயிக்கத்தக்க வகையிலே உண்டாக்கிய எனது

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

---

## யாழ் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா

16-9-72 (நாளை) சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் சேர். வைத்திலிங்கம் துரைசாமி அவர்களின படத்திரை நீக்கமும், பரிசளிப்பு விழாவும் நடைபெறும். ஸ்ரீலங்கா பிரதம நீதிபதி கனம். ஜி. எஸ் பெர்னுண்டோ அவர்கள் படத்திரைநீக்கம் செய்வர். திரு து. லோசேந்திரா அவர்கள்விசேட உரையாற்றுவர். பரிசளிப்பு அவருடைய பாரியாரால் நிகழ்த்தப் பெறும்.

---

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பரிதாபி௵ ஆவணிமீ ௩0 உ வெள்ளிக்கிழமை [1972]

## சமய நிந்தனை

யாழ்ப்பாணத்தில் நல்லூர்த் தொகுதியிலுள்ள ஓர் பிரபல்யம் வாய்ந்த அரசினர் மகாவித்தியாலயத்தில் ஓர் ஆசிரியர் தாம் கல்வி கற்பிக்கும் மாணவ மாணவிகள் நெற்றியிலணிந்திருக்கும் திருநீற்றையும், சந்தனப் பொட்டையும் அழிப்பிக்கின்றாரென்றும், சைவசமய நிந்தனை புரிகின்றாரென்றும் தெரிவிக்கும் செய்தி யெமக்குக்கிடைத்திருக்கின்றது. பெற்றார்கள் இதனையறிந்து மனம்வருந்துகின்றார்கள். குறித்த மகாவித்தியாலயத்தின் அதிபர் இவ்வநீதியான செயலைத் தடுக்க உடன் முயற்சியெடுத்தல் வேண்டும். சைவசமய சாதனங்களுள் சிறந்ததாகிய விபூதியை அவமதித்தல் சைவசமயத்தையே இகழ்ந்தமைக்குச்சமமாகும். விபூதி என்பதன் பொருள் மேலான செல்வம். அதற்கு ரக்ஷை, திருநீறு க்ஷாரம் பஸ்மம் என்ற திருநாமங்களுமுண்டு. வேதங்களில் அதன் பெருமை கூறப்பட்டிருக்கின்றமையினால் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் வேதத்திலுள்ளது நீறெனத் திருவாய் மலர்ந்தருளினர்.

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன்திருவாலவாயான் திருநீறே.

நாட்டில் மாணவர்களிடையே காணப்படும் ஒழுக்கக் குறைவுக்கும், விரக்திக்கும், அடக்கமின்மைக்கும் காரணம் கடவுள் கொள்கையின்மையே எனப் பெரியோர்கள் கூறுகின்றார்கள். அப்படியான காலத்தில் கடவுள் கொள்கையை நீக்க முயலுகின்ற ஆசிரியர்களின் பாவச் செயலைப் பற்றி நாம் என்ன கூறவிருக்கின்றது? மேற்படி மகாவித்தியாலயத்தின் பெற்றாராசிரிய சங்கம் இவ்வடாத செயலைப் பற்றி வடமாகாணக் கல்வியதிகாரிக்கு முறையிட்டு இவ்வநீதியைத் தடுக்க முயற்சிசெய்தல் வேண்டும்.

உலகப் பெரியார்களான திருவள்ளுவர் மகாத்மா காந்தி, விவேகானந்தர், ஐயன்ஸ்ரீன் ஆகியவர்கள் கடவுள்கொள்கையின் அவசியத்தைப்பற்றிக் கூறியதை நாம் முன்னர் குறிப்பிட்ட ஆசிரியர் படிப்பாராயின் அவர் திருந்தித் தமக்கும் பிறர்க்கும் நன்மை செய்யக்கூடியதாகவிருக்கும்.

கற்ற தனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்.

---

## விநாயக சதுர்த்தித் திருவிழாக்கள்

கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகப் பெருமன் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தித் திருவிழா விநாயகப் பெருமானுக்குச் சங்காபிஷேகம், விசேஷ பூஜை ஆராதனை, உற்சவமூர்த்தி ஸ்ரீ வரதராஜப் விநாயகப் பெருமான இரதத்தில் ஆரோகணித்து, விசேஷ மேள வாத்தியங்கள், பஜனை, காவடி ஆட்டங்கள் முதலியவற்றுடன் வீதிவலம் வந்து அடியார்களுக்குக் காட்சியளித்தல் ஆகியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது.

x x x

கொழும்பு தம்பையா முதலியார் சத்திரத்திலுள்ள விநாயகர் கோவிலும், செக்கடித்தெரு கதிரேசன்கோயிலும்,பேலியகொடை ஸ்ரீ பூபால விநாயகராலயத்திலும் விநாயக சதுர்த்தித் திருவிழாக்கள் சிறப்பாக நிகழ்ந்தன.

## சிலாங்கூர் சித்தி விநாயகர் கோயில்

ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் ஜீர்ணோத்தாரணஅஷ்டபந்தனமகா கும்பாபிஷேகம் பிரமஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் 14-9-72 வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து 48 நாட்களுக்கு அபிஷேகாரதனைகள் நிகழும். (ந. நி)

## கிளிநொச்சிகுருகுலப்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

மாணவர் திரு. வே. கதிரவேல் செய்துள்ளசேவை மகத்தானது. இப்பணிகளையெல்லாம் தொடர்ந்தும சிறப்பாக முடிக்க இந்த நாட்டிலே தூய்மையான கதிரவேலுகள் தோன்றினால் காசு தேடி வந்து மலைபோலக் குவியும். குருகுல மாணவ மாணவிகளுக்கு நாவலர் பெருமானின் ஐந்தாண்டுத் திட்டம் நல்ல வழி காட்டியாயமையும்' என்றார்,

சித்தன்கேணி பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அடிகல் நாட்டு வைபவத்துக்கான கிரியைகளை நடாத்திப் பேசுகையில் 'எல்லோராலும் அப்பு

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்

## சைவசமயத்தைப்பாதிக்கும்

1ம் பக்கத்து வளர்ச்சி

ரையே இக்குழுவில் சேர்க்க வேண்டும். சைவ சமயத்திற் பிறந்த ஒரு காரணத்தினாலே யாவரையும் சைவ சமயத்தைப்பற்றி எல்லாம் அறிந்துவிட்டார்களென்று நாம் கருதக்கூடாது.

சைவசமயிகள் என்று சொல்லிக் கொண்டு சைவ சமயத்துக்கு குழிதோண்ட எத்தனிப்பவர்கள் சைவ சமயிகள் அல்லர் அவர்கள் சைவசமயத்தைப் பற்றிப் பேசத் தகுதியில்லாதவர்கள் சைவசமயத்திலுள்ள ஒருவர் சமய ஒழுங்கின் வழி ஒழுகுபவராய் இருக்க வேண்டும். புலால் உண்பவர்களையும், மதுவருந்துபவர்களையும் சைவ சமயத்தவரென்று நாம்கூறலாமா! அவ்வழியில் நிற்க முடியாத ஒருவர் மற்றவர்களுக்குப் புத்திமதி கூறச் சிறிதளவேனும் தகுதியுடையவரல்லர். சமயத்தை அழிப்பதையே குறிக்கோளாக உள்ளவர்கள் சைவ சமயத்தைப் பாதுகாக்க வழிவகுப்பவர்களா? அன்னாரின் ஆலோசனையினாலேயா எமது சமயம் வளரும? சைவ மக்கள் ஒவ்வொருவரும் விழிப்பாயிருக்கவேண்டிய காலம் இது. அந்நியர் ஆட்சியில கூட இவ்வித இன்னல்கள் ஏற்படவில்லை என்றே கூறலாம்.

இந்து சமய ஆலோசனைக் குழுவை நீக்கி, சைவ சமய ஆலோசனைக் குழுவொன்றை நியமிக்க வேண்டும். அதில் சைவ முறைப்படி சமயத்தைக் கற்று அம் முறையில் வாழக் கற்றறிந்த பெரியோர்கள் அங்கம் வகிக்க வேண்டும். சைவ சமயத்துக்கெனப் பல்லாண்டுகளாகத் தொண்டாற்றிவரும் சைவ பரிபாலன சபை, சைவாநுட்டான சபை, சைவப் புலவர் சங்கம், வேதாகம சங்கம், சைவ உயர் பீடம் போன்ற பல சபைகளுண்டு. அச்சபைகளின் பிரதிநிதிகள் சைவ சமய ஆலோசனைக் குழுவில் இடம்பெற வேண்டும். இந்து சமய ஆலோசனைக் குழுவில் இச் சபைகளின் பிரதிநிதிகள் ஒருவராவது இருக்கின்றாரா? ஏன் அச்சபைகளில் அரசாங்கத்திலுள்ள பெரிய உத்தியோகத்தவர்கள் இல்லாதமையே காரணம்? பதவி உயர்ச்சியினால் சைவனாக வாழ முடியாது. பிறப்பொழுக்கங் குன்றாது, தன் சமய முறைப்படி வாழ்பவரே, வாழ்ந்து காட்டுபவரே ஏனையோருக்கு எடுத்துக் காட்டாக இருந்து சைவ சமயத்தை வளர்ப்போராவர், பாதுகாப்போராவர்.

அரசினரின் ஆலோசனைச் சபை யாருடைய ஆலோசனைப்படி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனரோ வென்பது தெரியவில்லை. எனினும் ஆலோசனைச்சபையில் உள்ளவர் சைவசமயிகளாயின் இத்தகைய புரட்சியை உண்டுபடுத்தக்கூடாது. கோடரிக்காம்புகளாக இருக்கக் கூடாது. தங்கள் கொள்கைகள் சைவ சமயக்கொள்கைகளுடன் மாறுபடின் அவர்கள் சைவ சமய அலுவல்களில் தலையிடுதல்கூடாது.

ஒரு கேள்வி இப்பொழுது எழுகின்றது. புதுப்புதுத் திட்டங்கள் எல்லாம் சைவ சமயத்தவருக்கு மாத்திரமா? பிறமதத்தினருக்கும் இது போல் திட்ட முண்டா?

அரசினர் சமய விஷயங்களில் தலையிடக்கூடாது சமய சபைகள் சங்கங்களிடம் சமய சம்பந்தமான பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும்.

மதச்சுதந்திரம் இலங்கை அரசியலமைப்பும் அத்தியாயம் அடிப்படையுரிமைகளும் சுதந்திரங்களும் என்ற தலைப்பின் கீழ் 18 (1) (ஈ) பந்தியில் காப்பற்றப் பட்டு இருப்பது யாவரும் அறிந்ததே. அதே அத்தியாயத்தல் 18 (2) (ஈ) பந்தியில் சில கட்டுப்படுகள் உண்டு. அந்தக் கட்டுப்பாடுகளில் இப் புதிய திட்டம அடங்குமா? இல்லை. அப்படியாயின் மதச் சுதந்திரம் வெறும் ஏட்டுச் சுரக்காயாகுமேஅன்றி உண்மையில் இல்லை என்றே கூறவேண்டும்.

சமய விஷயங்களில் அரசினர் ஈடுபடக் கூடாது என்றும், சமய விஷயங்கள் சம்பந்தமான ஆலோசனை தேவைப்படின் தகுதி வாய்ந்தவர்கள் கொண்ட குழுவிடம் அப்பொறுப்பைக் கொடுக்கவேண்டும் என்றும் ஒரு சிலரின் கொள்கைகளை ஏற்று சைவ மக்களிடையே மனக்கசப்பையும் மனக்கொந்தளிப்பையும ஏற்படுத்தக் கூடாது என்றும் எமது கருத்தைத் தெரிவிக்கின்றோம். சைவ சமயத்தின் தொன்மை முறைகளையும் நன்மையையும் வளர்ச்சியையும் பாதிக்கும் எச் செயலையும் எதிர்த்துப் போராடுவோம என்றும் தெரிவிக்கின்றோம்.

முந்தொரு காலந்தன்னில்
மூவுலகந் தன்னில்
வந்திடு முயிர் செய்த
வல்வினைய தனாலே
யந்தமின் மறையெல்லா
மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந்
தேவரு மருளுற்றார்.

— கந்தபுராணம்

## கலை விழா

யாழ் கனகரத்தின மகா வித்தியாலயத்தில் திறந்த வெளியரங்கு கட்டட நிதிக்காக மேற்படி கல்லூரிப் பழைய மாணவ மாணவிகள சங்கம் 15, 16-9-72 ல நாட்களில் கல்லூரி அதிபர் திரு எஸ். அரியரத்தினம் அவர்கள தலைமையில ஒரு கலை விழாவை நடாத்துகின்றனர். கல்லூரி மாணவ மாணவிகளால் தயாரிக்கப்பட்ட 'மனக்கோயில'' என்ற நாடகமும் நடைபெறும்.

—0—

## தமிழ் விழா

பண்டாரவளை அர்ச். தோமையப்பர் கல்லூரி தமிழ் இலக்கிய கலாமன்றம் (16-9-72) சனிக்கிழமை பி. ப 2 மணியிலிருந்து தமிழ் விழாவொன்றினை பண்டாரவளை நகர மண்டபத்தில் சிறப்பாக நடாத்தவிருக்கின்றது. உரையரங்கில் திரு. நா. குழந்தைவேலு அவர்களும் பிறரும் கலந்து கொள்கின்றார்கள்.

திரு. சொக்கன் தலைமையில் நடைபெறவிருக்கும் கவியரங்கில் பிரபல கவிஞர் திரு சண்முகம் சிவலிங்கம் அவர்கள் கலந்து கொள்கின்றார் திரு. வை. இராசலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் நாடகஅரங்கில் கல்லூரி ஆசிரியர் திரு நா திருச்செல்வம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 'வெற்றி முரசு' என்னும் சரித்திர நாடகம் கல்லூரி மாணவர்களால் நடிக்கப்பெறும்,

x x x

## வாழ்த்துரைகள்

பண்டாரவளை, அர்ச். தோமையப்பர் கல்லூரி தமிழ் இலக்கிய கலாமன்றம் 16-9-72-ல் நடாத்தவுள்ள தமிழ் விழாவினையொட்டி வழங்கியவை:

**கல்லூரி உப அதிபர் அவர்கள்**

''எமதுகல்லூரி இலக்கியக்கலாமன்றம வருடாந்த தமிழ் விழா நடாத்தும் இத்தினத்தில எனது நல்லாசிகளை நல்குவதில் பெருமகிழ்ச்சியெய்துகின்றேன். மாணவர்களின் உளச்சார்பை வளர்ப்பது கல்வியின் நோக்கங்களில் ஒன்றாகும். இதைக் கருத்திற் கொண்டே இலக்கியக் கலாமன்றம இயல், இசை, நாடகம் என்ற மூன்று அரங்குகளில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துளளது. மன்றத்தின ஏற்பாடுகள் பாராட்டுதற் குரியதாகும்.

மிககுறுகிய காலத்தில் துரித வளர்ச்சியடைந்துள்ள எமது இலக்கிய காலமன்றம் மேன்மேலும் பல நிகழ்ச்சிகளை அளித்து தமிழ் மாணவர்களின ஆற்றலையும, உளச்சார்பையும் வெளியுலகில் வெளிப்படுத்த வேண்டும் என வாழ்த்துகின்றேன். விழா சிறப்புற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக''.

ஐ. மரியதாசன்

x x x

**கலாமன்றப் பொறுப்பாளர்**

''மாணவர்களின் அறிவு வளர்ச்சி கற்பிக்கப்படும் பாடங்களில் மாத்திரம தங்கியிருப்பதில்லை, பாடசாலை வாழ்க்கையில் அவர்கள் தங்களது திறமையைக் காட்டுவதற்கு பயன் படுகின்ற சந்தர்ப்பங்களிலும்,கல்லூரி ஆசிரியர்கள பெற்றோர்கள, பழைய மாணவர்கள ஆகியோரால் ஏற்படுத்திக் கொடுக்கப் படுகின்ற சந்தர்ப்பங்களிலும் அவ் வறிவு வளர்ச்சி தங்கி யிருக்கின்றது. இச்சந்தர்ப்பங்களை மாணவ விழாக்கள் விளையாட்டுப் போட்டிகள் போன்றன அளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மாணவர் பாடசாலை வாழ்க்கையில் பற்றுக் கொள்வதற்கும அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும இத்தகைய விழாக்கள மிகவும் உதவி புரிகின்றன. இந்த வகையில் தமிழ் இலக்கியக்கலாமன்றம் மாணவர்களது மனதில் புத்துணர்ச்சிகளை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது. மகுடத்திற்கு மணிவைத்தது போன்று கலாமன்றத்தின் சேவையில நாட்டம கொண்ட மாணவர்கள் எடுக்கின்ற இத்தமிழ் விழா இனிதே நிறைவேற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன''.

தி. கமலநாதன்.

சைவ பரிபாலன சபை

# சமயபாடப்பரீட்சை

## விண்ணப்ப நாள் நீடிப்பு

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு பாடசாலை விடு முறைத்தவணை மாற்றியமைக்கப்பட்டதால் பல பாடசாலைகளின் கேள்விக்கிணங்க சைவசமயபாடப் பரீட்சைவிண்ணப்பத் திகதி 20-9.72 எனவும், பிந்திய விண்ணப்பத் திகதி 30-9.72 எனவும் மாற்றப்பட்டுள்ளது.

பரீட்சை முன்னர் குறித்தபடி 5-11-72 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

சி. சீவரத்தினம்
பரீட்சைக் காரியதரிசி

சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம், 31-8-72.

நேயர் நெஞ்சம்

# இந்து ஆலோசனைச் சபை நடவடிக்கை எடுக்குமா?

## சைவ சமயத்தைக் காக்க வேண்டும்

கடந்த 10 9-72 சிந்தாமணியில் "இந்து சமய மாணவர்களுக்கு பிறமதம் அடங்கிய சமய பாடத்திட்டம்" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியை மிகவும் கவனமாகப் படித்த பின்னர் இதனை எழுதி அனுப்பவேண்டும் எனத் தீர்மானித்துளளேன். தங்கள் சொந்த மதத்தைப்பற்றி இளம் பிள்ளைகள் முதலில் ஐயந்திரிபற அறிந்துகொள்வதற்கு முன்னர் வேறு மதங்களைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடச்செய்வது — வைப்பது எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான செயல் ஆகும்? இந்து ஆலோசனைச் சபையின் சிபார்சின்பேரில் சைவ மாணவர்கள் புத்தமதம் முகமது சமயம் கிறிஸ்தவமதம் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு புதிய சமயபாடத்திட்டம் வழி வகுப்பது பெரும் ஆபத்தை ஏற்படுத்தி விடப்போகிறது, முன்னர் இளைஞர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று தடை செய்தபொழுது சிலர் இளைஞரைப் பலாத்காரமாக அரசியலில் ஈடுபட வைத்து அதன் பெறு பேற்றையும் அனுபவித்தனர். அதேபோல ஒரு மதத்தை (சைவத்தைப்பற்றி) நல்லாக அறிவதற்கு முன்னர் இதரமதங்களையும் சமய பாடத்திட்டத்தில் புகுத்திவிட்டு எது பிழை? எது சரி? என்ற ஐயங்களை மாணவர்களுக்கு உண்டாக்கும் பாடத்திட்டத்தினால் சைவ மதமே அழிந்து போகுமெனக் கூறுதல் மிகையாகாது.

"இச் செயல் புதிய அரசியல் திட்டத்தினால் புத்தசமயத்தைப் பாதுகாத்துக் கொண்டு சைவத்தை அழித் தொழிக்கும் சதித் திட்டம் என்று சைவப்பிமானிகள் பலர் கருதுகின்றனர். அன்னை போன்ற தமிழ் மொழியை அழித்து அதன் அந்தஸ்தையும் குறைத்துவிட்டபின்னர் எமது நாயன்மார்களினால் போற்றப்பட்ட திருநீறு, ஸ்ரீபஞ்சாட்சரம் ஆகிய சைவசாதனங்கள் எதிர்காலஉலகில்விளங்கவிடாது அழித்தொழித்துவிட சிலருடைய சதியுடனும் ஒத்தாசையுடனும் இத்திட்டம் உண்டானதா? என்று கேட்கவேண்டி இருக்கின்றது. எனவே இந்து விவகார சபை இனியாகுதல் இந்தத் தற்கொலைக்குச் சமமான நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வருமா? எனக் கேட்க விரும்புகிறேன்.

தி. சிவகுருநாதன்
கந்தரோடை
12 9-72. சுன்னாகம்.

# தெல்லிப்பழை காசியிற் பிள்ளையார் கோயில்

## வருடாந்த அபிஷேகமும் உற்சவமும்

ஏறக்குறைய எண்பது ஆண்டுகளுக்கு முன் தெல்லிப்பழையைத் வாசஸ்தானமாகக் கொண்ட மூதாட்டி ஒருவர், புண்ணிய பூமியாகிய இந்தியாவில் ஸ்தல யாத்திரையாக பல தலங்களையும் வழிபட்டுக் கொண்டு, காசியையும் தரிசிக்கச் சென்றார். அங்கிருந்து ஒரு பிள்ளையார் திருவுருவத்தைக் கொணர்ந்து தெல்லிப்பழையில் வீணாக்கட வைரவன் ஊர் திருப்பதியில் பிரதஷ்டைசெய்து விநாயகப் பெருமானை முப்போதும் பூஜித்து வழிபட்டு வந்தனர்.

சில வருடங்களுக்குப் பின்னர் இந்தக் காசிலிங்கத்தினருகில் ஒரு விருட்சம் தானாகத் தோன்றி வளர்வதாயிற்று. இவ்விருட்சம் தோன்றிய காலம்தொட்டு வழிபடுவோரின் எண்ணிக்கை கூடுவதாயிற்று. அதன் காரணமாக கோவிலின் திருவருள் விலாசம் வளர்பிறைபோற் மிளிர்வதாயிற்று. விருட்சத்தின் பெயரோ, இனமோ எவருக்கும் தெரியாது. அயல் கிராமங்களிலுள்ள பேரறிஞர்கள் பலர் இங்கு வந்து விருட்சத்தைத் தரிசித்து, காசியிற பிள்ளையாரின் அருளைப்பற்று ஏகினர்களென அறிகின்றோம்.

இருபதாம் நூற்றுண்டின் பத்திய பகுதியளவில் வழிபடுவோர்களின் பக்திசிரத்தைக் குறைவினாலோ, பிற காரணங்களினாலோ ஆலயம் பழுதடைந்து, வருவாயும் குறையத் தொடங்கிவிட்டது. இக் கோவிலின் பிரதம குருவாகக் கடமையாற்றிய சிவஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் சிவபதமடைய அவருடைய மகன் சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள் பிரதம குருவானார். அவருடையமுயற்சியினாலும் கிராம மக்களுடைய நன் முயற்சியினாலும் சிறப்பானமுறையில் கோவில் புனருத்தாரணஞ் செய்யப்பெற்றது.

1971ம் ஆண்டு புரட்டாசி மாதம் சிவாகமஞான பாநு, பிரதிஷ்டா பூஷணம், நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் தலைமையில், கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்யப்பெற்றது.

4-9-72 திங்கட்கிழமை மணவாளக்கோல வைபவம் நிகழ்ந்தது. அன்று தொடக்கம் பன்னிரண்டு தினங்களுக்கு விசேட அபிஷேகமும, பூசையும் ஆராதனையும் நிகழ்ந்து விநாயகப்பெருமான், விசேட அலங்காரங்களுடன் சுவாமி வீதிஉலா வருதலும், சங்கீதகதாப்பிரசங்கம் உபந்நியாசம், நாதஸ்வர இன்னிசைக்கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

— ம. சி. சிதம்பரப்பிள்ளை

## பண்ணிசை வகுப்பு

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் மகாவித்தியாலயத்தில் திருமுறைப் பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப்பெற்றுள்ளது. பண்ணிசைப் புலவர் பி. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்களிடம் பயின்ற மாணவி திருமுறைச்செல்வி கண்மணியம்மா இராமலிங்கம் இவ் வகுப்பாசிரியாகவிருப்பார். சனி, ஞாயிறு மாலை 4-00 - 5-00 மணிவரை வகுப்பு நடைபெறும. மகளிருக்குமட்டும பண் பயிற்சி கொடுக்கப்பெறும். இவ் வகுப்பு ஆரம்ப தினத்தன்று வித்தியாலய அதிபர்அவர்களும் கிராம மக்களும் பண்ணிசை வகுப்பின் இன்றியமையாமைபற்றி உரை நிகழ்த்தினர். இவ் வகுப்பைப் பயன் படுத்தும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## குலத்தைக்கெடுக்கும் கோடரிக் காம்புகள்



பக்தர்: "சைவசமய பாடத்திட்டத்தில் குழப்பநிலையையுண்டாக்குதற்கு சில (அ)சைவர்கள்முன்வந்திருக்கிறார்களாமே!

சித்தர்: "சைவநீதி எங்கே...?' "கோடரிதன்னுளே - மரமது நுழைந்து தன் குலமெல்லா மழிக்கும்" என்ற நிலை தான் இன்றுஏற்பட்டிருக்குது! 'நாமமதிற் சைவர்களாக' நாமெல்லாம் வாழாமல் - எமது உயர்வைப் பேண, எழுச்சியுடன் முன்வந்துழைக்க வேணும் பாருங்கோ!

"நாயன்மார் - நாதன்"

## திருத்தம்

25-8-72 -ல் வெளிவந்த இந்து சாதனத்தில் M. B. 12622-ஆம இலக்க வழக்கு விற்பனவு விளம்பரத்தில் கோட்டுச் செலவை 481-80 சதம என அறியத் தருகின்றோம்.

# மறைமலையடிகள்

கற்றறிந்த பெரும்புலவர் நற்றமிழைத் தனித் தமிழில் எழுதிப்பேசி தமிழ்மக்களின் நல்லுணர்வை வளர்த்து ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் மறைமலையடிகளார். தங்களைப்பெற்றெடுத்த தமிழ் நாட்டின் அறத்தைப் பணையைப் பாதுகாத்து பெரும் புகழை நிலைநாட்டி மறைந்தும் மறையாத பெருமகனாய் விளங்குபவர் மறைமலையடிகளார், அதனாற்றான் தமிழகத்தில் மட்டுமல்ல கடல் கடந்த மலேசியாவிலும் ஈழத்திலும் அவர் புகழ் பரவியுள்ளது.

அடிகள் ஆற்றிய பணி காலத்தாற் சாகாது ஞாலத்தில் நிலைத்து நிற்கும் பணியாகும். இபபேருண்மையை முனைவர்(டாக்டர்)மு. வ பின் வருமாறு உள்ளம் தொடும் முறையில் எடுத்துரைக்கிறார் "தமிழ்த்தலைவர் மறைமலையடிகள் செய்துள்ள தொண்டு குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு உரிய தொண்டு அன்று. தமிழின் நிகழ்காலத்திற்கும்எதிர் காலத்திற்குமான நெடிது நின்று பயன் தரும் தொண்டு செய்துள்ளார் அடிகள். தமிழ் மெல்ல மெல்ல மணிப்பிரவாள மொழியாக மாற இரு

"ஈழ வேந்தன்"

ந்த தறுவாயில் தன் செம்மையும் சிதைவுற நேர்ந்த நெருக்கடியான நிலையில் அகற்கு உறு துணையாய் முன் நின்று தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்துவளர்த்தபெருந்தொண்டு அவர் ஆற்றியதாகும். இனித்தமிழ்மொழி தலை நிமிர்ந்து வாழும் என்று நம்பக் கூடிய நிலையில் தமிழை வாழவைத்த பெருமை அவரைச்சார்ந்ததாகும். எதிர் காலமொழி வரலாற்றில் இந்த அரிய தொண்டு பொன்போல் போற்றப்படும். உணர்ந்தாற்றான் அடிகளைப் பிரிந்த பிரிவு ஆற்றொணுத பிரிவு என்பது உணரப்படும். அடிகள் மறைந்து 22 ஆண்டுகள் கழிகின்ற நிலையிலும் இச்சொற்றொடர்களைப் படிக்கும்போது நம்மை அறியாமலே கண்களில் நீர் பெருகத்தான் செய்கிறது

தலைசிறந்த ஆய்வளார்:

தனித் தமிழ் இயக்கம் அடிகளின் உயிர் மூச்சென்றாலும அவரின் அளப்பரிய பெருமைக்கும் அது ஒரு எல்லைக்கோடாக அமையக்கூடாது. அவர் தமிழ் இலக்கிய நெறித் தந்தையாகவும் விளங்கினர் என்பதை யாம் மறக்கமுடியாது. தமிழிலக்கியத் துறை ஆய்வில் தனக்கெனத் தனியிடம் பெற்று விளங்கும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை செப்பும் பினவரும் செம்மை சான்ற மொழிகள் தமிழ ஆராய்ச்சி உலகில் அடிகள பெற்றிருந்த உன்னதநிலையை இனிது எடுத்து இயம்பும் இதோ அவர் மொழிந்தவை:- "தமிழ் இலக்கியங்களில் காலம் பொருள் முதலியகூறுகளை ஆராயும் முறை ஆங்கில நாட்டு முறையை அடியொற்றி வருவதொன்று. காலம் பற்றியும் ஒப்புமை பற்றியும் ஆராய்ச்சி நிகழும் இதனை முதற் கண் தமிழ் இலக்கியத் துறையுட்புகுத்தி இனிய உரையில் எழுதிக் காட்டியபெருமை அடிகளுக்கே உரியதாகும். இவ்வாராய்ச்சிக்கு நாட்டின் சமய, சமுதாய, அரசியல் வரலாறு பற்றி அறிவு அடிப்படையாக வேண்டுவதொன்று, இதனை தமிழ் வகையில் ஆராய்ந்து தமிழ் நாட்டுமக்களின் அரசியல், மொழி சமயம் ஒழுக்கம், முதலியவற்றின் வரலாறுகளை ஆராய்ந்து அடிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் எழுதிய கட்டுரைகளும் பலவாகும். மாணிக்கவாசகர் வரலாறும் கால ஆராய்ச்சியும் என்ற பெயர் உரை நூல் மாணிக்கவாசகரை பொருளாகக் கொண்டு எழுந்ததெனினும் அதன் கண் தம் நூல்கள் பலவற்றின் காலமும கருத்தும் ஆராய்ந்து காட்டி அறிஞர் பலரை அத்துறையில் ஈடுபட்டு சிறப்புச்செய்த வகையில் அடிகள் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நெறித் தந்தையாகினார். (வரும்)

கோட்டு வற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 9833

தம்பிப்பிள்ளை கதிரவேற்பிள்ளையும் பெண் கமலாம்பிகையும் வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம, தற்சமயம் 291/1 கவுளக் ரேட் கொழும்பு - 6.

—வழக்காளி

எதிராக

தியோகுப்பிள்ளை பதினுதனும் பெண் திரேசம்மாவும் வண்ணார் பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M B 9833-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும துண்டுக் காணி 1972- ஆம் ௵ புரட்டாதி ௴ 20-ம ௳ புதனகிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 6440/-ம 17-3-68 தொடக்கம் 11-1-69 வரைக்கும் ரூபா 4000/- க்கு 12 வீத வட்டியும் அதன் பின முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 367/- 10 சதமும். இம் முழுத்தொகையிலும் ரூபா 2000/- கழித்து மிகுதி முழுவதும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கில் உள்ள பறையடிவாடிக்கரை என்னும் 5 நிலப் பரப்பும் 8½ குளியும் இல் 5 பரப்பும் 8, 1/2 குளியு உத்தரவாதயபெற்ற A. லாசறஸ் உலாந்தாவின் 30-8-60 ம் ஆண்டில் அமைக்கப்பெற்ற 2762 ம இலக்க பிளானில் பகுதி B என்னும துண்டால் அமைக்கப்பெற்றுள்ளது. இதற்கு எல்லை கிழக்கு S. ஞானப்பிரகாசமினதும M. இனுசிமுத்துவினதும் ஆதனம் வடக்குநீககிலாப்பிள்ளை ஆசீர்வாதத்தினதும பெண் மாக்கிறெட்டினதும ஆதனம். மேற்கு றேட்டு. தெற்கு K. வைத்தியினதும மற்றவர்களினதும் ஆதனம இது அடங்கலும்.

பதி. இல. D 280/157

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்.

தொல்புரம், 24-7-72.

249 15-9-72

## கிளிநொச்சி குருகுலத்தில் சர்வசக்தி பீடம்

3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

என்று அன்பாக அழைக்கப்படும் திரு. கதிரவேல் அவர்கள் திரிகரண சுத்தியுடன் கிளிநொச்சியாகிய இந்தப் பரந்த நல்ல வெளியில் சர்வசக்தி பீடம் ஒன்றை அமைக்க எண்ணியதும் யான் இவ்விடம் வந்து இந்தக் கிரியைகளைச் செய்யக் கிடைத்ததும் பூர்வ புண்ணியப் பயனே. இந்தச் சர்வசக்தி பீடம் நல்ல குருமாரை உற்பத்தி செய்பவும் வழிகாண வேண்டும். இந்த நல்ல கருமத்துக்கு நாம் ஒவ்வொருவரும் துணையாயிருப்போம்' என்ருர்.

கிளிநொச்சி குருகுலம்வளர்த்த வரலாறுகள் குறித்து தவத்திரு. வடிவேற் சுவாமிகள், ஆத்மஜோதி நா. முத்தையா, கே பி. ஹரன் உட்படப் பலர் உரையாற்றினுர்கள்.

குருகுல ஆசிரியர் திரு. வே, கதிரவேல் பேசுகையில் 'கிளிநொச்சி குருகுலத்தின் முக்கிய நோக்கம் ஆதாரக் கல்வித் திட்டம், வள்ளுவர்பண்ணை, சர்வசக்தி பீடம் முதலிய அபிவிருத்தித் திட்டங்களே. நாம் நம்மால் இயன்றதைச் செய்ய இறைவன் தூண்டுகிருன். அந்த இறைவனது தூண்டுதலினுலே தான் என்னுல் ஏதாவது செய்யமுடிகிறது கிளிநொச்சியில் அமைந்துள்ள இக் குருகுலம் வாழ வழிகாண வேண்டும். என்று சைவ மெய்யன்பார்கள் உள்ளத்திலுலேநினைத்தாலே போதும் வளர்ச்சி நிச்சயம் உண்டு என்ருர்.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலய அதிபர் திரு. வ. ஆறுமுகராசா தலைமையில் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. ந, நி

## COMMISSION SALE

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் றெக்குவெஸ்ற் கோட்டில்

1. விஞசித்தம்பி சின்னத்தம்பி. கோப்பாய் வடக்கு யாழ்ப்பாணம். —வழக்காளி

வழ: இல. 6127 / A எதிராக

1. பூதன் செல்லன், கோப்பாய் வடக்கு யாழ்ப்பாணம். — எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1972ம் ஞூ ஐப்பசி மாதம் 27ம் திகதி (27-10-72) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 273-00 இன்னும் ரூபாய் 150/-க்கு 20-12-68 தொடக்கம் 5-6-70 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்மேல் முழுதொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 34-50 இதில் ரூபாய் 130/- கட்டப்பட்டது. கோட்டுச் செலவும் கட்டப்பட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் வடக்கு இறை நி பர. இலா. 12 (V. C.) கிணறு. செய்பயிர், வான்பயிர்களும், வீடுகளும், இதற்கு எல்லை கிழக்கு: ரேட்டு. வடக்கு: சுக்கிரவார மடதர்ம ஆதனம். மேற்கு: ஒழுங்கை, தெற்கு: கந்தசாமி பெண் திலவதியின் ஆதனம், இதடங்கலில் பிரிவிடப்படாத ¼ பங்கில் நி. பர. இலா. 1 (V. C.) வடக்குப் புறமாக உள்ள வீட்டில் முழு உரித்தும். மறு வீடுகள் புற நீங்கலாக.

பதிவு இல: K 217/47

167/1, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம், 8-9-72.

ப, நா. தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
எம் 247 15-9.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1, S. குலசேகரம் 2. பெண் புவனேஸ்வரி கோண்டாவில் —வழக்காளிகள்

வழ இல: M B 7213 எதிராக

1. சின்னத்துரை பொன்னுத்துரை
2. பெண் இராசம்மா, கோண்டாவில். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 7213ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972ம் ஞூ ஐப்பசி மீ 20ம் திகதி (20-10-72) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2175/-ம், 25-1-65 தொடக்கம் 23-6-66 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 299-60 சதமும் இதில் ரூபாய் 1400/- கொடுபட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற் கோண்டாவில் இறை 'அரியல்காடு' என்னும் காணியுள் பிரிவிடப்படாத அரைப்பங்கு நி. பா. இலா. 4 (V·C) இதில் இருக்கும் வீட்டுடனும், எல்லை கிழக்கிலும், வடக்கிலும் ஒழுங்கைகள், மேற்கு நவரத்தினம் பெண் தையல்நாயகிக்குரிய ஆதனம், தெற்கு நாராயணபிள்ளை பரராசசிங்கத்துக்கும் பெண் இராசம்மாவுக்குரிய ஆதனம், தெற்கு எல்லைக் காணியிலிருக்கும் கிணற்று தண்ணீர்ப் பங்கும். வழிவாய்க்கால் உருத்தும் பதிவு இல; D 278 43

167/1 கோவில் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம், 8-9-72,

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
246 9-9-

**வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

*யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணூர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 15 9—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது, பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்*

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

புன்னாலைக்கட்டுவன் ஐயாத்துரை இளையதம்பி மரணம் —வழக்காழி

1. யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் T 2386 இலக்க தத்துவ வழக்கில் மரணித்த ஐயாத்துரை இளையதம்பியின் ஆதனங்களுக்கு தத்துவகாரஞக புன்னாலைக்கட்டுவன் இளையதம்பி இரகுநாதனும்
2. புன்னாலைக்கட்டுவன் கந்தையா சோமசுந்தரமும் பெண்
3. ஷெ இராசம்மாவும்
4. ஷெ ஐயாத்துரை இளையதம்பி கைம்பெண் தெய்வானைப் பிள்ளையும் பிரதிஹஸ்த வழக்காளிகள்.

இல M B 6692 *எதிராக*

சுன்னுகம் கந்தரோடை

1. வெற்றிவேலுப்பிள்ளை செல்லத்துரையும்
2. ஷெ தையல்நாயகியும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 6692ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகளை 1972ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி (28-10-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 15,109/- இதில் ரூபா 10,000,- க்கும் 1-6-64 தொடக்கம் 1-7-67 வரைக்கும் 100 க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய 817-03 (கோட்டுச் செலவில் ரூபா 175/- கழிபடவேண்டியது)

**காணி விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோயிற்பற்று கந்தரோடை இறை வத்தாய்ப் புலம் (Vaththaaippulam) நி. பர. 16 குளிகள் 7½ யும் கல்வீடும், கிணறும், தென்னை, மாமரங்களும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கு: அம்பலாணர் குமாரசாமியின் பிள்ளைகளுக்குரியவாதனம், வடக்கு செல்லம்மாவின் உரிமைக்காரின் ஆதனம், மேற்கு: கீழே சொல்லப்படும் இரண்டாமாதனம், தெற்கு ரேட்டு இதடங்கலும்.

2. ஷெ கந்தரோடை இறை 'வத்தானைப் புலம் வத்தகை வாதக்கை தெற்கு பறையன் தறை' (Vatthanaippulam Vaththakai Vathakai Ketku Parayan tharai) நெ. பர. 10 (பத்தும) செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு: மேலே சொல்லப்பட்ட முதலாமாதனம், வடக்கு கார்த்திகேசுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு: கார்த்திகேசு பெண் தையல்நாயகத்துக்கும பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ரேட், இதடங்கலும்.

3. ஷெ கந்தரோடை இறை 'வத்தகை வடக்கும் கொட்டையடியும்' (Vaththai vadakkum Koddaiyadiyum) நி பர. 13ம் குளிகள் 13½ம் பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு; கீழே சொல்லப்படும் நாலாமாதனமும், வடக்கு ரேட், மேற்கு: வேலு நாகலிங்கத்துக்கும் சகோதரங்களுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு அம்பலவாணர் குமாரசாமியின் பிள்ளைகளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதடங்லும்.

4. ஷெ கந்தரோடை இறை வத்தகை வடக்கும் கொட்டையடியும் (Vaththakai vadakkum Koddaiyum) நி பர. 4 (நாலும்) பனைகளும் டெலிகளும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு: சதாசிவக் குருக்கள் பொன்னையாக் குருக்களின் பிள்ளைகளுக்குமுரிய ஆதனம், வடக்கு ரேட், மேற்கு மேலே சொல்லப்பட்ட மூன்றும் ஆதனம், தெற்கு: அம்பலவாணர் குமாரசாமியின் பிள்ளைகளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், 14—8-72

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம் 245 14—9

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

விநாயகர் சபாபதிப்பிள்ளை அராலி வடக்கு (அராலி வடக்கு சபாபதிப்பிள்ளை காலம்சென்ற மகள் நாகபூசணியின் சொத்துக்கு சட்டப்படி நியமிக்கப்பட்ட பிரதிநிதி ரெஸ்ரியன்றறி வழ இல, 1885 டிஸ்றிக்கோட்) — வழக்காளி

வழ. இல. M. B. 8995 எதிராக

செல்லையா நாகராஜா வண்ணூர்பண்ணை மேற்கு —எதிராளி-

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 8995ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 27-ம் திகதி (27-9-72) புதன்கிழமை முற் பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 4260/-ம் 5-4-1967ம் ஆண்டு தொடக்கம் 16-1-1968 வரைக்கும் ரூபா 3000/- க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு கொடுபட்டுள்ளது. இதில் கழிவு ரூபா 500/— (9-6-1964 ல்) கொடுபட்டுள்ளது ரூபா 1000/- (26-12-1964 ல் கொடுபட்டுள்ளது. ரூபா 910/- (19-11-1971)-ல் கொடுபட்டுள்ளது மொத்தக் கழிவு ரூபா 2410/.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பிரிவு வண்ணூர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணூர்பண்ணை வட மேற்கு இறை "செருக்கற் புலம்" நிலப் பரப்பு 3ம இதில் வடக்கு பக்கமாக நில, பர. குளி 8 ம் எல்லைகள் கிழக்கு சுப்பிரமணியத்தின் மனைவி இராசாத்தியினதும் செல்லையாவின் மனைவி சின்னப்பிள்ளையின் ஆதனங்கள் வடக்கு செல்லையா நாகராசாவின் ஆதனம். மேற்கு ரேட்டு. தெற்கு செல்லையாவின் கைம்பெண் அன்னத்தின் ஆதனம். அடங்கலும்,

நாகேந்திரமடம், வட்டுக்கோட்டை, 27.8.72. 251 15.9.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B11080

சண்முகம சுப்பிரமணியம் சுதுமலை —வழக்காளி

எதிராக

மாரிமுத்து கணேசு, சுதுமலை - எதிராளி

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B 11080-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972ம் ஞூ ஐப்பசிமீ 16ம்திகதி (16-10-72) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

தீர்வைத் தொகை.- முதல் வட்டி ரூபா 2166/75-ம் 9-8-69 தொடக்கம் 20-11-69 வரைக்கும் ரூபாய் 1860-க்கு 10%வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 312/06 இதில் ரூபா 890/-கொடுபட்டது. கோட்டுச் செலவால் ரூபா 125/- கொடுபட்டது.

**ஆதன விபரம்**

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் மானிப்பாய் கோயிற்பற்று சுதுமலை இறை வலிகாமம் மேற்கு குருஞ்சுருப்பன் என்று அழைக்கப்படும் காணி. நீ ப 10¾ இதில் கிழக்குப்பக்கத்தால் நீ.ப3 உம் 10¾ குரியும் வடமேற்குப் பக்கத்தில் இருக்கும் கிணத்தில் தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்காலும் உண்டு. எல்லை கிழக்கு வயித்திலிங்கம் செல்லத்துரையும் அம்பலவாணர் கைம்பெண் பார்வதிப்பிள்ளை வடக்கு இளையதம்பி விசுவலிங்கத்தின் உரிமைக்காரரும் மேற்கு மாணிக்கம் அப்பையா தெற்கு செல்லத்துரை பெண் தங்கச்சிஅம்மா.

இ. கனகரத்தினம்
கொமிஷனர், விலைமதிப்பாளர்
35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
248, 15-9-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 12540

1. சின்னத்துரை தங்கவேலாதம்
2. பெண் ரஙகநாயகி இருவரும் திருநெல்வேலி யாழ்ப்பாணம் — வழக்காளிகள்

எதிராக

பரராயசேகரம் கைம்பெண் பார்வதிப்பிள்ளை,சாவகச்சேரி தெற்கு சாவகச்சேரி. —எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டின் M B 12540-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1972ம் ஞூ ஒக்ரோபர் மாதம் 7-ந் திகதி (7-10-72) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா1400பின் 30-5-71 தொடக்கம 16-12-71 வரை ரூபா 1000/- க்கு 10% வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 327-66 சதம்.

**ஆதன விபரம்**

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரிஇறை"வரோதயம்வளவு" ப நி 5½ இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் யோகேஸ்வரன் பெண் காமட்சிக்குரிய ஆதனம் மேற்கு கையொழுங்கையும் ஆறுமுகம் கந்தையாவுக்குரிய ஆதனமும், தெற்கு வல்லிபுரம் சின்னையாவுக்குரிய ஆதனம இது அடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

சி. செ மாரிமுத்து
கொமிசனரும்.விலைமதிப்பாளரும்
விதானை வளவு, சித்தன்கேணி
11.8-72
250 15-9-72